பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 23 (8—11—72) புதன் வெளியீடு: ஐப்பசி 24 (9—11—72) வியாழன் [இதழ்: 120

'வெற்றி வீர[ர்]' கூறுகிறார்!

★

" எங்கள்மீது பழியைப் போட்டு சிறையில் அடைக்க முதல்வர் முயற்சிக்கிறார்!

" பல தோல்விகளைக் கண்டு விட்ட முதல்வர், இன்னும் தோல்வி பெறுவார்; இதை மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்."

—புதுக் கட்சி ஸ்தாபகர்

'மகஜர்' வீரர்களின் மாய்மாலம்

குற்றச்சாட்டுக் கொடுத்ததாலேயே ஆட்சியை அகற்றிவிட முடியுமா?

★

பூனா மாநாடு கூறியதை பூபேஷ் குப்தா அறியாரா?

கம்யூனிஸ்டுகளின் 'கபட நாடகம்' -- செழியன் அம்பலப்படுத்துகிறார்

சென்னை, நவ. 8—

!! கம்யூனிஸ்டுத் தலைவர்களும் – எம். ஜி. இராமச்சந்திரனும் கோருவதுபோல் – ஒரு மகஜரைக் கொடுத்தவுடனே அமைச்சரவை பதவி விலகுவதென்றால் – மத்தியிலோ அல்லது மாநிலங்களிலோ எந்த ஒரு அமைச்சரவையும் பதவியில் இருக்கமுடியாது.

ஸ்தாபனக் காங்கிரசுத் தலைவர்கள் அண்மையில் பூனாவில் கூடியநேரத்தில், இந்திரா காந்தியாரின் அரசின்மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறார்கள்; 'திருமதி இந்திரா காந்தி அரசு பொதுவிசாரணைக்கு உட்படப் பதவி விலகவேண்டும்' என்று பூபேஷ் குப்தா அப்போது கேட்டது உண்டா?

பஞ்சாபிலும், அரியானாவிலும் உள்ள கம்யூனிஸ்டுத் தலைவர்கள், அந்த மாநிலங்களின் இந்திரா காங்கிரசு அரசுமீது ஊழல் குற்றச்சாட்டுக்களை எழுப்பியிருக்கிறார்கள்; உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் முக்கிய காங்கிரசு உறுப்பினர்களே ஆளுகின்ற அமைச்சர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை எழுப்பியிருக்கிறார்கள்.

ஒரிசாவில் தற்போதைய அமைச்சரவை பீடி இலை காண்ட்ராக்டர்களிடமிருந்து ரூ. 16 இலட்சத்திற்குமேல் இலஞ்சம் வாங்கியிருப்பதாகக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கிறது.

இங்கெல்லாம் 'அமைச்சர்கள் உடனடியாகப் பதவியிலிருந்து விலக வேண்டும்' என்று பூபேஷ் குப்தா கேட்கவில்லை; ஆனால் தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதவி விலக வேண்டும் என்று பூபேஷ் குப்தா கோருகிறார்!

!! எந்தக் குற்றச்சாட்டுமீது என்பது பின்னால் கூறப்படும்; 'குற்றஞ்சாட்டியவரின் திருப்தி ஒன்றே முடிவான தீர்ப்பு' என்றாலன்றி, இம்மாதிரியான ஒரு நிலையில் தமிழ்நாட்டில் தி. மு. கழக அரசு தன்னைத்தானே மாய்த்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படாது !!

என்று நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் திரு. இரா. செழியன் அவர்கள் ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்; அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

" தி. மு. கழக அரசுக்கு எதிராக எம். ஜி. இராமச்சந்திரனும், அவரைப் பின்தொடர்ந்து எம். கலியாணசுந்தரமும் குடியரசுத் தலைவரிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள்; அதில் அடங்கியுள்ள மர்மங்கள் பற்றி இன்னும் மக்கள் ஏதும் அறியமாட்டார்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான் தமிழ்நாடு சட்டப் பேரவையில் கம்யூனிஸ்டுகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில், அரசுக்கு எதிராகப் பலவேறு குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன; முதலமைச்சர் அவற்றுக்கும் பதிலளித்தார்; இதற்கிடையில் என்ன புதிய குற்றச்சாட்டுக்களைக் கண்டுபிடித்து விட்டார்களோ -- தெரியவில்லை!

மகஜர் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதிலிருந்தே குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுவிட்டது என்று கொள்ள இயலாது.

தாம் மகஜரைப் படித்தும் பார்த்ததாகவும் -- திருப்தியடைந்திருப்பதாகவும் பூபேஷ் குப்தா கூறுகிறார்.

மத்திய அரசின் தலையீட்டைத் தாம் கோரவில்லை என்று கூறுகிறார் பூபேஷ் குப்தா.

'கருணாநிதி அரசு பதவி விலகிய பிறகு இங்கே அமையவேண்டிய புதிய அமைச்சரவை பற்றித் தமிழ்நாடு சட்டப் பேரவையே தீர்மானிக்கலாம்' என்கிறார்.

அவரைப் பொறுத்தமட்டில், இப்போதைய அமைச்சரவை பற்றித் தீர்மானிக்கத் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கோ--பெரும்பான்மைக் கட்சியினருக்கோ உரிமையில்லை -- அவரே இதைத் தீர்மானித்துவிட்டார்!

ஆக, 'ஓர் அமைச்சரவையைப் பெரும்பான்மைக் கட்[சி] அமைத்துச் சட்டமன்றத்தி[ல்] ஒப்புதலைப் பெறுவதா அல்ல[து] எதிர்க் கட்சி அமைச்ச[ர]வையை அமைப்பதா' என்[ற] அடிப்படையான கேள்வி இங்கே எழுகிறது!

திராவிட முன்னேற்றக் கழ[க]மானது, நிலப் பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோருட[ன்] பிணைந்திருப்பதாகப் பூபே[ஷ்] குப்தா குற்றஞ்சாட்டுகிறார்.

தமிழ்நாட்டுப் பொது மக்[கள்] ஒன்றை நன்கு உணர்வார்கள்; சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தின்போது எந்தக் கட்சியினர் நிலப் பிரபுக்களோடு பிணைக்கப்பட்டு இருந்தார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்."

சிரிப்புக்கு ஒரு செய்தி!

" கட்சித் தலைமைப் பதவி வேண்டுமானால் தரத் தயார் என்று உங்களிடம் சொல்லப்பட்டதா?"

என்று யாரோ ஒரு நிருபர் புதுக் கட்சி ஸ்தாபகரைக் கேட்டாராம்!

அதற்கு அவர்,

" தொண்டர்களே இல்லாத அந்தக் கட்சித் தலைமையா?"

என்று திருப்பிக் கேட்டாராம்.

ஹ...ஹா...ஹா...

ஹி......ஹி......ஹி

கலகப் படை வருகிறது-எச்சரிக்கை!

' வெளி மாவட்டங்களிலிருந்து வர விரும்பும் நண்பர்கள் லாரிகள் -- பஸ்களில் வந்து சேர்ந்துவிடலாம்; போலீசார் தடுத்து நிறுத்த மாட்டார்கள் என்று எண்ண வேண்டாம்.

" எப்படி வருவீர்களோ -- பத்தாந்தேதி சென்னை நகரில் இருந்தாக வேண்டும்."

—புதுக் கட்சி ஸ்தாபகர்

சென்னையில் உள்ள ஆட்கள் போதாது என்று வெளி மாவட்டத்துச் சீடகோடிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுவிட்டது!

அவர்களெல்லாம் எப்படி வந்து குவியப்போகிறார்கள் என்பதற்கு இதுவே சான்று!

லாரிகளில் ஏறிக்கொண்டு ஊர்வலம் செல்லக்கூடாது என்பது நடைமுறையில் உள்ள விதி; அதை மீறிக்கொண்டு வருமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்!

'வாத்தியார்' அழைப்பு விடுத்த பிறகும் வாளாவிருக்க முடியுமா சீடகோடிகள்? வரும்போதே கலகம் -- அத்துமீறல் -- அடி, உதை -- இத்தியாதி காரியங்களில் ஈடுபடப்போவது உறுதியாகிவிட்டது!

சென்னை நகர மக்களே -- எச்சரிக்கையாயிருங்கள்! வருகிறது -- மக்கள் திலகத்தின் மக்கள் கலகப் படை!

மக்களாட்சித் தத்துவ மேதையே-- இன்னும் ஏன் உமக்கு இந்தப் பதவி?

' வாக்களித்த மக்கள் தங்கள் ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள்; நடைபெறுவது மக்கள் ஆட்சி அல்ல என்பதை உலகிற்கு அறிவிப்போம்."

—புதுக் கட்சி ஸ்தாபகர்

மக்கள் திலகமே -- உம்மிடம் எந்த மக்கள் வந்து இப்படிச் சொன்னார்கள்?

எந்த மக்கள் இந்த ஆளுங்கட்சிக்கு வாக்களித்தார்களோ அந்த மக்கள்தான் உமக்கும் வாக்களித்தார்கள்; பொதுவாகக் கழகத்துக்கு வாக்களித்த மக்கள் தங்கள் ஆதரவைத் திரும்பப் பெற்றுவிட்டார்கள் என்றால், அந்தக் கழகத்தின் பெயரைச் சொல்லி வாக்குகள் பெற்ற நீரும் மக்கள் ஆதரவை இழந்துவிட்டீர் என்பதுதான் பொருள்; ஆளுங்கட்சியிலிருந்து உமது கட்சிக்கு வந்துள்ள சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் ஆதரவை இழந்துவிட்டவர்கள் என்பதுதான் பொருள்.

முதலில் நீரும் -- உமது ஆட்களும் கழகத்தின் பேரால் பெற்ற [பதவி]களை உதறித்தள்ளிவிட்டுப் பிறகு மக்கள் ஆதரவைப் [பற்றிப்] பேசுவதுதான் முறை!

நீர் சொல்லுவதையெல்லாம் செய்து கொண்டிருந்தால் இது மக்களாட்சி; உமது விருப்பத்தையெல்லாம் நிறைவேற்ற மறந்துவிட்டால் இது மக்களாட்சி அல்ல! இதுதான் நீர் அறிந்து வைத்திருக்கும் மக்களாட்சித் தத்துவமா?

தனியார் சொத்துக்களைக் கொளுத்தச் சொன்னாரா?

' வன்முறையை நான் கண்டிக்காமல் இல்லை; என்னையே வேண்டுமானாலும் கொளுத்துங்கள்; பொதுச் சொத்துக்களைக் கொளுத்தாதீர்கள்' என்று சொல்லியிருக்கிறேன்; இதைவிட எப்படிச் சொல்ல முடியும்?!!

—புதுக் கட்சி ஸ்தாபகர்

எப்போது இப்படிச் சொன்னார்? பொதுச் சொத்துக்களான அரசாங்கப் பஸ்களைக் கொளுத்தி வெறியைத் தீர்த்துக்கொண்ட பிறகா[?]

பொதுச் [ச]ொத்துக்களைக் கொளுத்தாதீர்' என்றால், தனிப்பட்டவர்களி[ன்] சொத்துக்களைக் கொளுத்தலாம் அல்லவா? இதைத்தா[ன்] அவர் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்.

இப்படிச் சொ[ன்னதைக்] [கே]ட்டுக் கொண்டுதான், தனியார் கார்களையெல்லாம் தடுத்து நிறுத்தி -- அடித்து நொறுக்கினார்கள்; வேழவேந்தன் காரைக் கொளுத்தியே தீர்த்தார்கள்!

இதைவிட அவர் வேறு எப்படிச் சொல்லமுடியும் -- இப்படித்தான் சொல்ல முடியும்!

ஊழல் பேர்வழிகளின் கூடாரமாகப் புதுக் கட்சி

[✱]

புடம்போட்ட தங்கமாகத் தி. மு. க. பாசறை

புதுடில்லி, நவ. 7—

கேள்வி :—" சென்னையில் மதிப்பு மிகுந்த பகுதியில் இரண்டரை இலட்சம் ரூபாய்க்குக் கூடுதலான மதிப்புள்ள வீடு கட்டியதாகவும், அதற்குக் கணக்குக் காட்ட முடியவில்லை என்றும் கே. ஏ. மதியழகன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று; அந்தச் சொத்தில் பங்குள்ள அவரது தம்பியை உங்கள் கட்சியின் அமைப்புச் செயலாளராக நியமித்துள்ளது முறையா? உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஊழலுக்கு அப்பாற்பட்டவர்களா?"

பதில் :—" எனது கட்சி சாதாரண நிலையில் உள்ள தொழிலாளர்கள் நிறைந்த கட்சி; புதிய கட்சியில் சேர்ந்துள்ளவர்கள் நாணயமானவர்கள்; அதை நாங்கள் மக்களிடம் நிரூபிப்போம்; புதிய கட்சியில் சேரும்போது அவர்களது சொத்து விவரங்களை நாங்கள் தெரிந்து கொள்கிறோம். ஓராண்டு கழித்து அவர்களின் சொத்துக்களை நாங்கள் மீண்டும் கணக்கிட்டு, அவர்கள் ஊழல் மூலம் சொத்து சேர்த்துள்ளார்களா என்பதைக் கண்டறிவோம்."

—புதுடில்லிப் பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்வியும் — அதற்குப் புதுச் கட்சி கண்ட புரட்சித் தலைவர் சொன்ன பதிலும் தான் மேலே தரப்பட்டுள்ளது.

புதுடில்லி நிருபர்கள் மிகவும் புத்திசாலிகளாக இருப்பதுடன் தைரியசாலிகளாகவும் இருக்கிறார்கள்; அதனால்தான் 'குட்டை' உடைத்தெறிந்து புரட்சித் தலைவரையே நேருக்குநேராக மடக்கியிருக்கின்றனர்!

சென்னையில் உள்ள சில நிருபர்களைப்போல், 'புதுக் கட்சித் தலைவரைத் திருப்திப்படுத்த வேண்டும்' என்று நினைத்து அப்படிப்பட்ட கேள்விகளாகவே கேட்கவும் — தி. மு. கழகத்துக்கு எதிராக அடியெடுத்துக் கொடுத்துச் செய்தியை முடிக்கச் செய்யவும் அவர்களுக்கு உண்மையிலேயே தெரியாது போலிருக்கிறது!

செய்தியுடன் தங்கள் கைச்சரக்கையும் சேர்த்து பரபரப்புச் செய்தியை உருவாக்கித் தரும் கலையும் சென்னையில் உள்ள சில நிருபர்களுக்குமட்டுமே கைவந்த கலையல்லவா? நல்லவேளையாக, இப்படிப்பட்ட 'நிருபர் திலகம்' யாரும் டில்லியில் இல்லையென்றே தெரிகிறது!

"தி. மு. கழகத்தின்மீது ஊழல் குற்றஞ்சாட்டும் உங்கள் கட்சியின் யோக்கியதை என்ன" என்று பட்டவர்த்தனமாகவே கேட்டிருக்கின்றனர்;

புதுக் கட்சித் தலைவரைத் தலைகுனியவைக்க இதைவிட வேறு என்ன கேள்வி கேட்க வேண்டும்? - இப்படி ஒரு கேள்வியை என்றைக்காவது இங்குள்ள நிருபர்கள் அவரைக் கேட்கத் துணிந்தனரா?

இங்குள்ள பத்திரிகைப் புளுகுகளை உண்மையென்று நம்பி ஏமாறும் அப்பாவி வாசகர்கள், இந்தச் செய்தியைக் கண்ட பிறகாவது தெளிவடையக்கூடும்.

புதுக் கட்சி எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் புகலிடமாக விளங்குகிறது என்பதும் — எப்படிப்பட்டவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு புதுக் கட்சி துவக்கப்பட்டிருக்கிறது என்பதும் — புதுடில்லி நிருபரின் ஒரு கேள்வி மூலமே நன்கு புலப்படக்கூடும்.

இந்தக் கேள்வியில் பொதிந்துள்ள உண்மை அந்தக் கட்சியைப் பற்றித் தெரிந்துகொள்ள ஒரே ஒரு 'சாம்பிள்'தான்; உண்மையைக் கோடிட்டுத்தான் காட்டியிருக்கிறார் டில்லி நிருபர்; எல்லாவற்றையும் எடுத்துரைத்தால் விரியும் என அஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்; ஏனையவற்றை இதன் மூலம் உய்த்து உணர்க!

புதிய கட்சியின் அமைப்பாளர் எப்படிப்பட்டவர் — அவர் மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு என்ன என்பதை நிருபர் சுட்டிக் காட்டினார்; அதை அக்கட்சியின் தலைவரோ, அருகில் 'பிரசன்னமாக' இருந்த 'சாட்சாத்' அமைப்புச் செயலாளரோ அதை மறுத்துரைக்கவில்லை!

கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லும் சக்தியோ — துணிவோ புரட்சித் தலைவருக்கு வரவில்லை; சுற்றிவளைத்து ஏதேதோ சொல்லி மழுப்பியிருக்கிறார்.

கட்சியின் அமைப்புச் செயலாளரே இப்படி என்றால், அந்தக் கட்சியில் இலட்சக்கணக்கில் (?) வந்து சேர்ந்துகொண்டிருப்பதாகக் கூறப்படும் உறுப்பினர்களின் சங்கதி எப்படிப்பட்டதாக இருக்கும்?

அதே அமைப்பாளர் இன்று வரை தி. மு. கழகத்திலேயே இருந்திருப்பாரானால் — புதுக் கட்சித் தலைவரின் கணக்கப்படி அவரும் ஊழல்காரர் தான்! எல்லோரையும் முந்திக்கொண்டு புதுக் கட்சிக்குத் தாவிவிட்டதால் அவர் அப்பழுக்கற்ற நாணயக்காரராகிவிட்டார்!

தி. மு. கழகமே ஊழல்காரர்களின் கூடாரம்' என்று டமாரம் அடித்துக் கொண்டிருந்தவர், அந்தக் கூடாரத்திலிருந்து தம் கட்சிக்கு வருபவர்களைச் சோத்துக் கொள்ளலாமா?

இதுவரை தி. மு. கழகத்திலிருந்து உண்மையான முன்னணித் தோழர்களோ — தொண்டர்களோ எவரும் புதுக் கட்சிக்குப் போய்விடவில்லை; கழகத்திற்குள் போலி வேடம் போட்டுத் திரிந்தவர்களும் — 'புதுசு'களும் — அரைவெட்டுகளும் — உதவாக்கரைகளும் — ஒதுக்கிவைக்கப்பட்டவர்களுமாக இருந்த ஊழல் பேர்வழிகள்தான் இப்போது அங்கே படையெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்! இவர்களுக்கெல்லாம் 'ஞானஸ்நானம்' கொடுக்கவே பிறந்திருக்கிறது புதுக் கட்சி!

'புதிய கட்சியில் சேர்ந்துள்ளவர்களெல்லாம் நாணயமானவர்கள்' என்கிறார் புரட்சித் தலைவர்! பட்டியலைப் பார்த்தாலே புரிகிறதே! எந்த அளவு கோலை வைத்து அளந்து பார்த்தாரோ அவர்களின் நாணயத்தை! அவர்களெல்லாம் நாணயமானவர்கள் என்பதை மக்களிடம் நிரூபிக்கப்போகிறாராம்! எப்போது — எங்கே — எப்படி நிரூபிக்கப் போகிறார்?

புதிய கட்சியில் சேரும்போது அவர்களின் சொத்து விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வார்களாம்; ஓராண்டு கழித்து அவர்களின் சொத்துக்களைக் கணக்கிட்டுப் பார்த்து — அவர்கள் ஊழல் மூலம் சொத்துச் சேர்த்துள்ளார்களா என்று கண்டறிவார்களாம்!

கொக்குத் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கப் போகிறார் புரட்சித் தலைவர்! நாட்டு மக்களே — ஓராண்டு வரை காத்திருங்கள்; அந்த அரிய காட்சியைக் காணுவதற்கு!

பத்திரிகைகளில் வந்த கணக்குப்படி, இதுவரை இருபது இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அந்தக் கட்சியில் சேர்ந்துள்ளார்கள்: இன்னும் சிறிது காலத்தில் 50 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று கூறுகிறார்கள். இது வரை சேர்ந்துள்ள உறுப்பினர்களிடமெல்லாம் சொத்துக் கணக்குக் கேட்டுப் பெறப்பட்டிருக்கிறதா? அந்தக் கணக்கு எங்கே — யார் பொறுப்பில் உள்ளது? சொத்துக் கணக்குக் கொடுத்தபிறகுதான் உறுப்பினர் பாரத்தில் கையெழுத்து வாங்கப்படுகிறதா? அல்லது உறுப்பினராகச் சேர்ந்தால்போதும் பிறகு கணக்குக் கேட்டுக் கொள்ளலாம் என்று இருந்து வருகிறார்களா? உறுப்பினர் சேர்க்கும் பாரத்தில், சொத்துக் கணக்குக் காட்டுவதற்கென்று இடம் ஒதுக்கப்பட்டுள்ளதா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எங்கிருந்து பதில் கிடைக்கப் போகிறது?

புதுக் கட்சியில் சேரும்போது இருக்கும் சொத்து மட்டும் நேர்மையாகச் சேர்த்த சொத்து என்று புதுக்கட்சித் தலைவர் நம்புகிறாரா? நேற்று வரை அவராலேயே ஊழல்காரர்கள் என்று கூறப்பட்டவர்கள், இன்று புதுக் கட்சிக்கு வந்திருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய சொத்து எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

புரட்சித் தலைவர் யார் யாரையெல்லாம் 'ஊழல் பேர்வழிகள்' என்று கருதினாரோ அவர்களெல்லாம் தி. மு. கழகத்தைவிட்டுப் பறந்தோடிவிட்டார்கள்! அவர்களெல்லாம் இப்போது அவர் பக்கத்தில் தான் இருக்கிறார்கள்!

அண்ணாவால் உருவாக்கப்பட்டு — இன்று கலைஞரால் கட்டிக் காக்கப்பட்டு வருகின்ற கழகம் அப்பழுக்கற்றதாக — தூய்மையுள்ளதாக -புடம் போட்ட தங்கமாக மாறிவிட்டது!

அண்ணா பெயரை வைத்துக் கொண்டு புதுக் குடித்தனம் தொடங்கியுள்ள கட்சிதான் ஊழல் பேர்வழிகளின் கூடாரமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது!

இந்த உண்மையை நாடறிந்து கொண்டிருக்கிறது! மயக்கத்தில் உள்ளவர்களும் விரைவில் தெளிவு பெறுவார்கள்!

மனச்சான்று உள்ளவர் கூற்று இது?

தாயின் மேல் ஆணையிட்டுச் சொல்வாரா அந்தத் 'தூயவர்'?

சென்னை, நவ. 7—

" நீங்கள் மதுரையில் பேசியபோது, 'அமைச்சர்கள் இலஞ்சம் வாங்கினார்களா?' என்று கேட்டீர்களாம்: அதற்கு மக்கள், 'இல்லை — இல்லை' என்று சொன்னார்களாம்; இப்போது ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?"

என்று புதுடில்லியில் எம். ஜி. ஆரை, செய்தியாளர்கள் கேட்டிருக்கிறார்கள்.

" நான் கேட்டது உண்மை; 'அமைச்சர்கள் இலஞ்சம் வாங்கினார்களா?' என்று கேட்டேன்; மக்கள் மௌனமாக இருந்தார்கள்; உடனே, 'நான் இலஞ்சம் வாங்கினேனா?' என்று கேட்டேன்; 'இல்லை' என்று சொன்னார்கள் "

என்று டெல்லியில் போய் எம்.ஜி.ஆர். இவ்வளவு பெரிய மகத்தான 'உண்மை'யைச் சொல்லியிருக்கிறார்.

'என்னுடைய தாயின்மீது எனக்கு அன்பு உண்டு' என்று அவர் சொல்வதுண்டு; அடிக்கடி அவர், தாயின்மீது ஆணை' என்று சொல்கிறார்!

அவருக்கு 'மனம்' என்று ஒன்றிருந்தால் — மனச்சாட்சி இருந்தால் — அவர் உண்மையிலேயே அவருடைய தாயாரை வணங்குவது உண்மையானால் — அந்தத் தாயின்மீது ஆணையாகக் கேட்கிறேன் — எம்.ஜி.ஆர். டெல்லியில் சொன்னது உண்மையா? அல்லது கடைந்தெடுக்கப்பட்ட பொய்யா என்று எனக்குப் பதில் சொல்ல வேண்டும்.

நான் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன்; அவர் சொல்வது உண்மை என்றால், இப்போது ஒரு கூட்டத்தைக் கூட்டி — அந்தக் கூட்டத்தில், 'நான் இலஞ்சம் வாங்கினேனா' என்று கேட்டு — வந்திருப்பவர்கள்' 'இல்லை' என்று பதில் சொல்லி அது போதுமென்றால், நாளைக்கே நாங்கள் ஒரு மாநாட்டை நடத்தி — அந்த மாநாட்டிலே இருக்கின்ற மக்களைப் பார்த்து, 'கருணாநிதியாகிய நான் இலஞ்சம் வாங்கினேனா?' என்று கேட்டு, 'இல்லை, இல்லை' என்று மக்கள் சொல்லிவிட்டால், அது போதும்' என்று எம்.ஜி.ஆர். விரும்புகிறாரா?

அது போதும்' என்று எம்.ஜி.ஆர். விரும்புவாரானால், நான் அவரைக் கேட்கிறேன் — 'மதுரையும், காஞ்சியும், இராசபாளையமும் அளித்த தீர்ப்பை அவர் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று; அதை ஏற்றுக்கொண்டு தீரவேண்டுமே என்ற அச்சத்தின் காரணமாக, 'மதுரையிலே நடக்கவில்லை' என்று இப்போது சொல்கிறார்; ஆகஸ்டு 6-ந் தேதி மதுரையிலே மாநாடு நடக்கிறது — 7-ந் தேதி பத்திரிகையிலே செய்தி வருகிறது; அதற்கும் பிறகு செப்டம்பர் போய் — அக்டோபர் போய் — நவம்பரில் டெல்லிக்குப் போய் அங்கே சொல்கிறார்— 'அப்படி நடக்கவில்லை' என்று!

இதிலிருந்தே, அவர் எவ்வளவு தூய்மையானவர் — உண்மையானவர் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளலாம்."

—கழகத் தலைவர் கலைஞர்

(சென்னை 77-வது வட்டப் பொதுக்கூட்டத்தில்)

போலி நிறுவனங்கள் கண்டுபிடிப்பு

புதுடில்லி, நவ. 8—

தங்களுக்குவேண்டிய எஃகினை திருட்டுத்தனமாகவே பெறுவதற்காகவே சுமார் நாற்பது போலி நிறுவனங்கள் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

அண்மையில் அதிகார பூர்வமான சில நிறுவனங்கள் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் மூலம் இது தெரியவந்துள்ளது; சில போலி வியாபாரக் குழுவினர் அடைந்திருக்கும் எஃகு ஒதுக்கீட்டின் அளவைக் கண்டுபிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இயக்கத்தின்போது இந்த திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டன; சந்தேகத்திற்கிடமான சில நபர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

சுதந்தரம் கிடைத்த 25 ஆண்டுகளுக்குப்பின் குசராத் அரசுக்கு வந்திருக்கின்ற நினைவு

'அரசு விழாக்களில் மதச் சடங்கு கூடாது'

முதலமைச்சர் திட்டவட்ட அறிவிப்பு

சனாதனிகள் கச்சை வரிந்து கட்டுவரா?

குசராத் அரசு விழாக்களில் மதச் சடங்கு எதையும் நடத்துவதில்லை என்று குசராத் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

" மதச் சார்பற்ற ஆட்சியில் மதச் சடங்குகள் நடத்தப்படக் கூடாது " என்று முதலமைச்சர் திரு. ஓசா அறிவித்திருக்கிறார்.

நாட்டில் நடப்பது மதச் சார்பற்ற ஆட்சி என்பது, சுதந்தரம் வந்து 25 ஆண்டு முடிந்த பிறகுதான் காந்தியார் பிறந்த மாநிலமான குசராத்தில் உள்ள அமைச்சரவைக்கு நினைவு வந்திருக்கிறது! இப்போதாவது அவர்களுக்கு இந்த நினைவு வந்ததே — அதுவே போதும்!

இப்போதாவது, 'மதச் சடங்குகள் கூடாது' என்று கூற அவர்களுக்குத் துணிவு வந்தது மகிழ்ச்சிக்குரியதே! அந்த மாநிலத்து அமைச்சரவைக்கும் — முதலமைச்சருக்கும் நமது பாராட்டு!

குசராத் அரசின் முடிவைக் கேட்டதும், 'சனாதனிகள்' திருக்கூட்டம் அலறக்கூடும்; 'மதம் போச்சு — நமது சலாச்சாரம் போச்சு — குசராத் மந்திரி சபையிலும் தமிழ்நாட்டு வாடை வீசுகிறது — யாரோ நாத்திகர்கள் அந்த மந்திரி சபையிலே புகுந்துவிட்டார்கள்' என்றெல்லாம், காஞ்சி காமகோடி முதல் பூரி சங்கராச்சாரி வரை கூச்சலிடக்கூடும். அவர்களைச் சொல்லுவானேன்? — இங்குள்ள இராசகோபாலாச்சாரியார் கூட 'கல்கி'யிலும், 'சுயராஜ்யா'விலும் கண்டனக் கணைகளைத் தொடுப்பார்; 'இந்து'வும் — 'சுதேசமித்திர'னும் தலையங்கம் எழுதக்கூடும்!

தமிழ்நாட்டில் நாம் பார்க்கவில்லையா — அரசு அலுவலகங்களில் 'கடவுள் படங்களை மாட்டக்கூடாது' என்றதும், எங்கெங்கிருந்த 'வட்டார'ங்களிலிருந்தெல்லாம் எதிர்ப்புக்கள் எழுந்தன என்பதை!

'ஆசிரியருக்குக் கடிதம்' எழுதுவதற்கென்றே சில கைதேர்ந்த நிபுணர்களைத் தமிழ்நாட்டு ஏடுகள் வைத்திருக்கின்றன அல்லவா? மதத்துக்கோ — மதவாதிகளின் ஆதிக்கத்துக்கோ எங்கே சிறு ஆபத்து வந்தால் போதும் — அடுத்த விநாடியே இங்குள்ள 'இந்து'வுக்கும், 'எக்ஸ்பிரசு'க்கும் வந்து குவிந்துவிடும் — 'ரெடிமேடு கடிதங்கள்'!

மதத்தின் பேரால் வடநாட்டிலே பல கொடுமைகள் நடக்கின்றன; தீண்டப்படாத—தாழ்த்தப்பட்ட மக்களை ஆண்டவனின் பேரால் 'நரபலி' கொடுக்கும் செய்திகளையெல்லாம் அடிக்கடி பத்திரிகைகளிலே பார்க்கிறோம்; அதைப்பற்றியெல்லாம் சனாதனத் திருக்கூட்டமும் — அதன் ஆதரவு ஏடுகளும் மூச்சுகூட விடுவதில்லை! மதக் காவலர்கட்கு ஏதேனும் ஒரு சிறு பாதகம் நேர்ந்துவிடுமானால் கச்சை வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டுவிடுவார்கள்!

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தி. மு. க. அரசு ஏற்பட்ட பின், அரசு விழாக்களில் மதச் சடங்குகள் நடைபெறுவதில்லை; இதற்கு முன்னர் இருந்த ஆட்சியில் வேத முழக்கங்களுடன் நடந்த விழாக்களும் உண்டு; பிள்ளையார் பிடித்து வைத்து — தேங்காய் உடைத்து — 'சங்கல்பம்' செய்துகொண்டு நடைபெற்ற துவக்க விழாக்களும் உண்டு; கழக அரசு வந்ததும், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள், தாமே விடை பெற்றுச் சென்றுவிட்டன! 'மந்திரி சபை கூட்டித்தான் இப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும்' என்ற அவசியம் இல்லாமல் போய்விட்டது! குசராத்தைப் போல இங்கும் மந்திரி சபை கூடி அத்தகைய ஒரு முடிவை அறிவித்திருந்தால், ஒரு போர்க் களத்தையே அமைத்திருப்பார்கள் — இங்குள்ள எதிர்க் கட்சியினர்!

'நாத்திகர் ஆட்சி வந்ததால் நாடே கெட்டுவிட்டது' என்று வைதீகர்கள் அலறியிருப்பார்கள்; அவர்கள் மறந்திருந்தாலும், அரசியல் கட்சியினர் சும்மாயிருந்திருக்கமாட்டார்கள்; கடவுளை ஏற்றுக்கொள்ளாத கம்யூனிஸ்டுக் கட்சியினர்கூட, 'கிடைத்த சந்தர்ப்பத்தை ஏன் வீணாக நழுவவிட வேண்டும்' என்று நினைத்து— சனாதனிகளைத் தூண்டிவிட்டாவது 'அரசியல்' நடத்த முனைந்திருப்பார்கள்!

இங்கு, சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டுவந்தபோது, ஆச்சாரியார் கட்சியைச் சேர்ந்த ஹண்டே எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லையா?

'ஆண்டவன் முன்னிலையில் உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்ற வேறுபாடு கூடாது' என்பதற்காக, எந்த சாதியினரும் அர்ச்சகராக வரலாம்' என்று தமிழக அரசு சட்டம் கொண்டுவந்ததும், அதை எதிர்த்து இங்குள்ள சனாதனிகள் சுப்ரீம் கோர்ட்வரை செல்லவில்லையா?

நல்லவேளை—'மதச் சடங்குகள் கூடாது' என்று தீர்மானித்து அறிவித்தது குசராத் அரசாக இருந்துவிட்டது; இப்படிப்பட்ட ஒரு முடிவை இப்போது தமிழக அரசு அறிவித்திருக்குமானால், என்ன நேர்ந்திருக்கும்?

உடனே திரண்டிருக்கும் எதிர்க் கட்சிகளின் பேரணி! பழைய— புதிய காங்கிரசுகள் முதல் வலது — இடது கம்யூனிஸ்டுகள், சுதந்தரா — சோஷலிஸ்டுக் கட்சிகள் உட்பட நேற்று முளைத்த ஒட்டுக் காங்கிரசு ஈறாகப் போராட்ட அறிவிப்புக்கள் கொடுத்திருப்பார்கள்! 'கருணாநிதி மந்திரி சபையே—இராஜினாமா செய்' என்று முழங்க ஆரம்பித்திருப்பார்கள்! ஊர்வலம் — அர்த்தால்— கவர்னருக்கு மகஜர்—கவர்னர் மீது நம்பிக்கையில்லாமல் குடியரசுத் தலைவரிடம் மகஜர் — டில்லிக்குக் காவடி — இன்னோரன்ன நிகழ்ச்சிகளெல்லாம் அடுத்தடுத்து நடைபெற்றிருக்கும்.

இத்தகைய நிகழ்ச்சிகளையெல்லாம் காணும் 'வாய்ப்பு' தமிழ்நாட்டுக்குத்தான் உண்டு; குசராத்திலே உள்ளவர்கட்கு இந்தப் பாக்கியம் கிட்டாது என்றே கூறிவிடலாம்.

ஏனென்றால், குசராத்தில் தி. மு. க. ஆட்சியும் இல்லை — இங்குள்ளதைப் போன்ற எதிர்க் கட்சிகளும் இல்லை! இன்னும் சொல்லப்போனால் அந்த இந்திரா காங்கிரசு ஆட்சியல்லவா நடக்கிறது?

'மாமியார் உடைத்தால் மண் சட்டி — மருமகள் உடைத்தால் பொன் சட்டி'யல்லவா? இதுதானே இன்றுள்ள அரசியல் நிலை?

சேனு'

பட்டம் துறப்பார் 'புரட்சித் தலைவர்?'

சினிமாவில் யாரும் செய்யாத 'புரட்சி'களையெல்லாம் செய்து முடித்துவிட்டு, 'அரசியலையும் ஒரு கை பார்க்கலாம்' என்று கிளம்பியிருக்கிறார் — மாஜி புரட்சி நடிகர்!

'மாஜி' என்று நான் குறிப்பிடுவதற்காக ரசிக சிகாமணிகள் கோபித்துக்கொள்ள வேண்டாம்; இனி யாரும் அவரை 'புரட்சி நடிகர்' என்று அழைக்கக் கூடாது என்பது — அவருடைய கட்சியின் அமைப்பாளர் போட்டிருக்கும் கட்டளை!

'புரட்சி நடிகர்' என்ற பட்டம் கழகத் தலைவர் கலைஞரால் கொடுக்கப்பட்டதல்லவா? இனியும் அந்தப் பட்டத்தை வைத்துக்கொண்டிருக்கலாமா? எனவேதான், நடிகர் தலையிலிருந்து 'டோபா'வைக் கழற்றி 'மேக்கப் மேன்' வீசுவதைப் போல், 'புரட்சி நடிகர்' என்ற பட்டத்தை எடுத்து வீசியிருக்கிறார் — புதுக்கட்சியின் 'பிரதம அமைப்பாளர்."

இருந்ததை எடுத்துவிட்டுத் தலையை அப்படியே 'காலி'யாக விடலாமா? 'டோபா'வுக்குப் பதில் குல்லாவை மாட்டுவது போல், 'புரட்சித் தலைவர்' என்ற பட்டத்தையும் சூட்டியிருக்கிறார்!

பழைய சட்டையை மாற்றிப் புதுச் சட்டை அணிவதற்காவது செலவு ஏற்படும்; பட்டத்தை மாற்றுவதற்குக் காசு பணமா தேவை? அதுவும், கட்சியையே நினைத்தவுடன் மாற்றிக்கொண்டவர்களுக்குப் பட்டத்தை மாற்றிக்கொள்வதில் என்ன சிரமம் இருக்கிறது?

அதுவும், முழுப் பட்டத்தையும் தூக்கி எறியவில்லை; 'டோபா'வின் பாதியை மட்டுமே பிய்த்தெறிந்துவிட்டதைப்போல், 'புரட்சி நடிகர்' என்பதில் 'நடிகர்' என்ற சொல்லைத்தான் நீக்கியிருக்கிறார்கள்!

கலைஞர் தந்த பட்டம் கூடாது என்றால், முழுப் பட்டத்தையும் நீக்கியிருக்க வேண்டாமா? 'புரட்சித் தலைவர்' என்ற புதுப் பட்டத்திலும் பாதி — புரட்சி — கலைஞருடையது!

'புரட்சி நடிகர்' என்பதில், புரட்சிதான் சிறப்புச் சொல்லே தவிர' 'நடிகர்' என்பது சிறப்புக்குரிய தல்ல — தொழிலைக் குறிப்பது தான்; நடிப்பவர்கள் அனைவரும் நடிகர்கள்தான்; 'நடிகர்' என்ற சொல்லுடன் 'புரட்சி' சேர்ந்ததால்தான் சிறப்புப் பட்டமாயிற்று!

கலைஞர் யாருக்குப் பட்டம் கொடுத்தாலும், அது நிலைத்து நிற்கும்; கலைஞர் கொடுக்கும் பட்டத்துக்குப் பிறகு வேறு யார் என்ன பட்டம் கொடுத்தாலும் அது நடைமுறையில் வழங்குவதில்லை.

கலைஞரிடம் பட்டம் பெற்றவர்கள் பலர் கலைஞருக்கே எதிரியாக மாறியதுண்டு; அந்தப் பட்டியலில் புரட்சி நடிகரும் சேர்ந்ததில் வியப்பில்லை; இது கலைஞரின் 'கைராசி'!

இந்த நேரத்தில் எனக்கு ஒரு சந்தேகம் எழுகிறது!

கலைஞர் தந்த பட்டம் கூடாது என்று அதை எடுத்துவிடச் சொன்ன புதுக் கட்சியின் அமைப்பாளர், இன்னமும் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத்தான் இருக்கிறார்; எப்போது அந்த 'எம்.பி.' பட்டத்தைத் துறக்கப் போகிறார்? அந்தப் பட்டமும் கழகத் தலைவர் கலைஞர் தயவால் அவருக்குக் கிடைத்ததுதானே?

எப்படியோ — தமிழ்நாட்டு அரசியலுக்கு ஒரு 'புரட்சித் தலைவர்' கிடைத்திருக்கிறார்! கரிபால்டி

யோ—மாஜினியோ — லெனினோ 'மறுபிறவி' எடுத்து வந்திருக்கக் கூடும் — யார் கண்டார்கள்?

ஆனால் எனக்கு மற்றொரு சந்தேகம்!

'சினிமா உலகத்தை எங்கே நிர்க்கதியில் விட்டுவிட்டு வந்து விடுவாரோ' என்பதுதான் அது!

இவர் அறவே நடிப்புத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டால், பிறகு திரைப்படத் துறை என்ன ஆவது? நடிப்புக் கலையின் சிகரமாகத் திகழ்ந்து — புரட்சிப் படைப்புக்கள் பல நாட்டுக்கு வழங்கி—'பாரத்' பட்டமும் பெற்றிருக்கும் இவர் முழுக்க முழுக்க அரசியலுக்கு வருவது என்பது கலைத்துறைக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு அல்லவா?

'புரட்சி நடிகர்' என்ற பட்டம் பிடிக்கவில்லை என்றால்; 'நடிப்புச் சிகரம்' என்றோ, 'நடிக மாமேதை' என்றோ மாற்றிக்கொண்டிருக்கலாம்; 'நடிகர்' என்ற சொல்லையே அடியோடு நீக்கியதிலிருந்து, அவர் இனி நடிக்கமாட்டார் என்றுதான் படுகிறது!

இதிலிருந்து எனக்கு இன்னொரு சந்தேகம் தோன்றுகிறது!

நடிப்புத் துறையை இவர் விடுகிறாரா — இவரை நடிப்புத் துறை கைவிடுகிறதா என்பது புரியவில்லை!

'அரசியலில் புரட்சி தேவை' என்பதற்காக நாட்டு நலனில்மிகுந்த நாட்டம் கொண்டு — சினிமாத் துறையைக் கைவிட்டு விட்டு அரசியலில் நுழையத் துணிந்திருக்கிறார் என்றால், அது உண்மையிலேயே பெரிய 'தியாகம்' தான்!

சினிமாவிலே 'சான்சு' குறைந்து வருகிறது—புதுப் படங்களுக்கும் 'புக்'செய்ய ஆள் வரவில்லை; 'இருக்கும் இரண்டொரு படங்களையும் முடித்துக் கொடுத்துவிட்டால் பிறகு என்ன செய்வது' என்று அஞ்சித்தான் 'அரசியல் பிரவேசம்' செய்திருக்கிறார் — என்று யாரேனும் சொல்லுவார்களானால், அதை நான் நம்பத் தயாராயில்லை!

வெளிப் படத்துக்குக் கிராக்கி குறைந்தால், இருக்கவே இருக்கிறது சொந்தக் கம்பெனி! அதுவும் போதவில்லை என்றால், ஆட்களா இல்லை—புரொட்யூசர்களாக ஆக்கிக்கொள்ள?— ஒரே நாளில் பத்து—இருபது படங்களின் பெயர்களைப் பட்டியல் போட்டு 'விளம்பரம்' கொடுத்துவிட்டால் போகிறது! பட முதலாளிகளை ஆக்கவும் அழிக்கவும் வல்லவராயிற்றே அவர்!

கையில், முதலே இல்லாத எத்தனையோ பேரை 'பட முதலாளி' ஆக்கிய வள்ளல் அல்லவா?

எனவே, அவரைப் பற்றித் தவறாக எடை போட்டுவிடக் கூடாது; ஏதோ 'காரிய'மாகத் தான் அவர் படத் துறையைத் துறந்துவிட முடிவு செய்திருக்கிறார் என்று நம்புகிறேன்.

இன்னொரு சந்தேகம்!

சினிமாத் துறையில் பல்லாண்டுக் காலம் இருந்து — முதுமைப் பருவத்திலும் நடிப்புத் துறையிலேயே 'புரட்சி'யை விளைவித்துக் கொண்டிருந்ததால்தான், அவருக்கு, 'இந்திரா காந்தி' அரசு, 'பாரத்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது!

இந்த நேரத்தில் போய் சினிமாத் துறையைக் கைவிடுவாரானால், 'பாரத்' பட்டம் என்ன ஆவது? அதையும் விட்டுவிடுவாரா?

'எனக்கு அந்தப் பட்டத்தைக் கொடுத்தது இந்திரா காந்தி அரசுதான்; கருணாநிதி தயவாலே பெற்றப் பட்டமல்ல' என்று அவர் கூறினாலும் கூறக் கூடும்!

என்றாலும், அரசியல் தலைவராக மாறிவிட்டபிறகு, நடிகருக்குரிய 'பட்டத்தை' வைத்துக் கொள்வது பொருத்தமாகாது என்று அதையும் கைவிட்டுவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! இந்திரா காந்தி அம்மையார் மனம் வைத்தால் இன்னொரு பொருத்தமான பட்டத்தை அவருக்குக் கொடுக்கமாட்டாரா என்ன?

மற்றொரு சந்தேகம்!

'புரட்சி நடிகர்' 'புரட்சித் தலைவராக' மாறிவிட்ட பிறகும், அவர் பெயரால் 'ரசிகர் மன்றங்கள்' தொடர்ந்து இருக்குமா? என்னுடைய இந்தநியாயமான சந்தேகத்தைப் போக்க வேண்டியவர்கள் ரசிக சிகாமணிகள்தான்!

நடிகருக்குத்தான் ரசிகர்கள் இருப்பார்கள்; அரசியல் தலைவருக்கு ஏது ரசிகர்கள்—தொண்டர்கள்தான் இருப்பார்கள்!

நான் இந்தக் கேள்வியை எழுப்பிய பிறகுதான், அந்தக் கட்சியின் அமைப்பாளருக்கே இது புரியும் என்று நினைக்கிறேன்; இனிப் புரட்சி நடிகர் ரசிகர் மன்றங்களையெல்லாம், 'புரட்சித் தலைவர் தொண்டர்கள் மன்ற'மாக ஆக்கிவிடுமாறு அவர் தம் கட்சியின் 'அதிகாரபூர்வமான' ஏட்டில் அறிக்கைவிடக் கூடும்!

ஆனால், இந்தப் பெயர் மாற்றத்தில் ஒரு சிக்கலும் இருக்கிறது; அப்படி ஓர் அறிக்கை விட்டால், ரசிகப் பெருமக்களே அந்தக் கட்சிக்கு முழுக்குப் போட்டுவிடுவார்கள்!

'நாங்கள் வெறும் ரசிகர்கள் தான்; எங்களை அரசியலுக்கு இழுக்கவும் வேண்டாம் — நாங்கள் உங்கள் தொண்டர்களாக மாறவும் வேண்டாம்' என்று கூறிவிடுவார்கள்!

இன்றைய புரட்சித் தலைவர் புரட்சி நடிகராக இருந்த காலத்திலேயே சொன்ன பொன்மொழிதான் இது!

'பாரத்' பட்டம் பெற்றதற்காக நடிகர் சங்கத்தில் சிவாஜி கணேசன் தலைமையில் பாராட்டுப் பெற்றபோது சொல்லவில்லையா?

" கலைஞர்கள் என்ற முறையில் எங்களுக்கு இருக்கும் ரசிகர் மன்றங்களை அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ள முனையாதீர்கள் என்று அரசியல்வாதிகளை எச்சரிக்கிறேன்."

இப்படிப் பேசிய அதே புரட்சி நடிகர்தானே — 'புரட்சித் தலைவர்' என்ற பெயரில் அரசியல் வாதியாகியிருக்கிறார்!

மா. செ.

நான்காம் திட்ட இறுதிக்கால முதலீடு

ரூ. 215 கோடி கேட்கத் தமிழக அரசு முடிவு

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் முதலமைச்சர் தகவல்

சென்னை, நவ. 7—

" நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி இரண்டு ஆண்டுக்கான திட்டம் ரூ. 275 கோடி அளவுள்ளதாக இருக்கவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதென்று தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது; இதன் தொடர்பாக செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் கூறியதாவது :—

" இந்த ஆண்டிற்கும் — அடுத்த ஆண்டிற்கும் எந்த அளவுக்குத் திட்டத் தொகை கேட்பது என்பது குறித்து அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது; 1972-73-ம் ஆண்டுத் திட்டத்திற்காக ரூ. 125 கோடியும், 1973-74-ம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 150 கோடியுமாக மொத்தம் ரூ. 275 கோடி திட்ட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்பதென்று அமைச்சரவையில் முடிவு மேற்கொள்ளப்பட்டது; இந்த 275 கோடி திட்ட ஒதுக்கீட்டில் மத்திய [illegible]உதவி — மாநிலத்தின் பங்கு ஆகியவையும் அடங்கிய தாக இருக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் முறையே ரூ 87 கோடி—ரூ. 97 கோடி—108 கோடி அளவில் மொத்தம் 292 கோடி அளவில் மாநிலத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது; மீதமுள்ள இரண்டாண்டுக் காலத் திட்ட ஒதுக்கீடு ரூ. 275 கோடி அளவுள்ளதாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்து — அவ்வாறு கோரியிருக்கிறோம்.

மத்திய அரசு அமைத்துள்ள நிதிக் குழு டிசம்பர் மாதவாக்கில் தமிழகம் வர இருக்கிறது; எந்தத் தேதியில் வருகிறார்கள் என்பது பற்றி இன்னும் உறுதியாகத் தேதி குறிப்பிடப்படவில்லை; நிதிக் குழுவிடம் தமிழக அரசின் சார்பில் அளிக்கப்பட இருக்கும் மகஜர் குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது."

செய்தியாளர்:—" தமிழக வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடம் ரூ. 6 கோடி கோரப்பட்டிருந்ததே — இதற்கு மத்திய அரசிடமிருந்து பதில் வந்துவிட்டதா?"

முதலமைச்சர் :— " நம்முடைய கோரிக்கையைப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் செய்தி வந்தது; தமிழக வறட்சி நிவாரண நிதிக்கு மத்திய அரசிடம் ரூ. 6 கோடி நிதியுதவி கேட்டோம்; அதை எதிர்பார்த்து ரூ. 1 கோடி செலவிட்டு வருகிறோம்."

விளையாட்டு அரசியல் வேண்டாம்

சட்டத்தின் நடவடிக்கைகளிலிருந்து தப்ப முடியாது

தூண்டிவிடுவோருக்கு முதலமைச்சர் கலைஞர் எச்சரிக்கை

சென்னை, நவ 8—

"வேறு எந்தக் காரணத்தாலும் கழக அரசைக் கவிழ்க்க முடியாது என்று உணர்ந்து விட்டதால், வலது கம்யூனிஸ்டுகளும் -- அவர்களது புதிய கூட்டாளிகளும் அராஜகத்தைத் தூண்டிவிட முனைந்திருக்கிருர்கள் -- அதற்கான முயற்சிகளிலெல்லாம் ஈடுபட்டிருக்கிருர்கள்!

"அமைச்சரவை மீது குற்றஞ்சாட்டும் அளவில் 'மகஜர்' ஒன்றுடன் ஆளுநரிடம் சென்ருர்கள்; அவர், அரசியல் சட்டத்தின் விதிகளை -- முறைகளை விளக்கினர்; 'என்னிடம் மகஜர் தந்தாலும் நான் முதல்வரிடம்தான் விளக்கம் கேட்க வேண்டும்' என்று சுட்டிக் காட்டினர்!

"பிறகு நேரே புதுடில்லிக்குச் சென்று குடியரசுத் தலைவரிடம் மகஜர் தந்தார்கள்! அவரிடமிருந்து பதில் வேண்டுமென்ருல் டில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அல்லவா ஊர்வலமாகச் செல்ல வேண்டும்? அதை விடுத்து, 'கவர்னர் மாளிகைக்கு ஊர்வலமாகச் செல்வோம்' என்ருல் என்ன அர்த்தம்?

"ஊர்வலத்துக்குப் பிறகு ஒரு நாள் குறிப்போம்--அர்த்தால் நடக்கும்; பஸ்கள் ஓடாது -- இரயில்கள் ஓடாது--பள்ளிகள் நடக்காது--சினிமாக்கள் நடக்காது--மக்கள் தெருவில் நடமாட மாட்டார்கள்--உலகத்தில் எதுவுமே அசையாது; நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்...' என்று அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டுக்கொண்டிருப்பது என்ன அரசியலோ!

"இப்படிப்பட்ட விளையாட்டான அரசியல் தமிழ்நாட்டின் அமைதி -ஒழுங்கைப் பாதிக்குமேயானுல், அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது!

"பத்திரிகைகளைப் படித்துவிட்டு உணர்ச்சிவயப்படுகிற வாலிபர்கள் - இவர்களின் உணர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு கொள்ளையடிக்கும் கொலை செய்யும் வஞ்சகர்கள் --இந்தச் சூழ்நிலையில் அகப்பட்டதைச் சுருட்டிக்கொள்ளலாம் என்று நினைக்கின்ற சமூக விரோதிகள் இருக்கிருர்கள்!

'ஆகவே, முதலில் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு--அதற்கு எந்தெந்தத் தலைவர்கள் காரணமாக இருந்தார்களோ--எந்தெந்தப் பத்திரிகைகள் காரணமாக இருந்தனவோ அவைகள்--சட்டத்தின் நடவடிக்கைக்கு ஆளாகும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

—சென்னை கோபாலபுரம் இளைஞர் மன்றச் சார்பில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணு பிறந்தநாள் விழாக் கூட்டத்தில்.

...புரட்சி'யாரின் சுருதி குறைகிறது

நிருபர்:—" இந்த மந்திரிசபை இராஜிநாமா செய்யவேண்டும் என்பதுதான் உங்கள் கோரிக்கையா?"

புதுக் கட்சித் தலைவர்:—" இவர்கள்போய் அந்தக் கட்சியில் உள்ள மற்றவர்கள் வந்தாலும் இவர்களைப் போலத்தானே நடந்துகொள்வார்கள்?"

...த்து நாட்களுக்கு முன்னுல் நிருபர்கள் கேட்ட கேள்வியும் புதுக்கட்சித் தலைவர் சொன்ன பதிலும் ...ன் மேலே உள்ளது.

புதுடில்லிக்குப் போய்விட்டுத் திரும்பியதும் நிருபர் கேள்விக்கும் புதுக் கட்சித் தலைவரின் பதிலும் ...ருமாறு:—

" இந்த 15 பேர் அமைச்சரவை மாறவேண்டும் என்றுதான் கேட்டோம்; இந்தக் கட்சி ஆட்சி போகவேண்டும் என்று சொல்லவில்லை."

செங்கற்பட்டு வட்ட தி. மு. க. கூட்டம்

செங்கற்பட்டு வட்ட தி. மு. க. கூட்டம், 10—11—72 பிற்பகல் 2 மணிக்கு செங்கற்பட்டு நகராட்சிப் பயணியர் விடுதியில் நடைபெறும்; மாவட்டச் செயலாளர் கே.டி.எஸ். மணி, சிட்டிபாபு எம்.பி., செ.கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொள்வார்கள்; வட்ட உறுப்பினர்கள் தவருது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் செ. ஏ. பலராமன் கேட்டுக் கொள்கிருர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

10--11--72

சங்கராபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: எம். செல்வராசு எம்.எல்.ஏ.; பேசுவோர்: பேராசிரியர் க. அன்பழகன், கொ. மாரியப்பன், நா. நாச்சியப்பன் எம்.எல்.ஏ., ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., மு. தெய்வீகன் எம்.பி., தோ. கேசவலு எம்.எல்.ஏ., எஸ். பி. பச்சையப்பன், எம். ஆனந்தன், க. வேங்கடபதி, டி. பெரியசாமி, துரைராசு, ஏ. நாகராசன் மற்றும் பலர்.

காஞ்சிபுரத்தில் கண் சிகிச்சை முகாம்

காஞ்சிபுரம், நவ. 8—

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏற்கனவே அனகாபுத்தூர் -- அம்பத்தூர் ஆகிய இடங்களில் இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன; மூன்ருவதாகக் காஞ்சிபுரத்தில் நாளை ஓர் இலவசக் கண் சிகிச்சை முகாம் தொடங்குகிறது.

காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திலும், கூட்டுறவுப் பயிற்சிக் கழகக் கட்டடத்திலும் நடைபெறும் இந்தச் சிகிச்சை முகாம்களில் நவ. 22-ம் நாள் முடிய சிகிச்சை அளிக்கப்படும்.

இரு கட்டடங்களில் கண்கள் பரிசோதனை செய்யப்படும்.

கண்களில் புரை எடுத்தல் போன்ற அறுவைச் சிகிச்சை பெற விரும்புபவர்கள் முதலில் காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையில் கண்களைப் பரிசோதனை செய்துகொண்டு உரிய அடையாளச் சீட்டு பெற வேண்டும்; கிராமப்புற மக்கள் ஆதார சுகாதார நிலையங்களில் அடையாளக் கார்டு பெற வேண்டும்.

புரை அறுவைச் சிகிச்சைக்குத் தகுதியுடையோர், முகாமில் தங்கியிருந்து அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்; நவம்பர் 10, 11, 12-ம் நாட்களில் புரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்கள் மட்டும் முகாமில் சேர்த்துக்கொள்ளப்படுவர்; நவம்பர் 11, 12, 13 ஆகிய நாட்களில் அறுவைச் சிகிச்சை நடைபெறும்.

நவ. 13-ம் நாள் முதல் 21-ம் நாள் முடிய இலவசக் கண் மருத்துவமும் -- கண்ணுடி அணிவதற்கான ஆலோசனைகளும் -- இலவசக் கண்ணுடியும் வழங்கப்படும்.

சிகிச்சை பெறுபவர்களுக்குத் தங்கும் வசதியும் -- உணவும் இலவசமாகத் தரப்படும்; இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் யு. எஸ். நடராசன் சிறப்பான முறையில் செய்துவருகிருர்.

கட்டாயப் பஞ்சாயத்துத் தீர்வின் பாதகநிலை

குடியரசுத் தலைவர் கிரி விளக்கம்

தொழில் தகராறுகளைத் தீர்க்கும் புதிய யோசனை

மீரத், அக். 7—

"கட்டாயப் பஞ்சாயத்துத் தீர்வு என்பது பாட்டாளி வர்க்கத்தின் முதல் நெம்பர் எதிரி; இது, தொழிலாளர்களைத் தாமாக உடன்பாடு காண முயற்சி எடுத்துக்கொள்ள விடாமல் செய்வதோடு, செலவுமிக்க நீதிமன்ற விவகாரத்திலும் கொண்டுவிட்டு விடுகிறது"

என்று தொழிலாளர் பொருளாதாரம் பற்றிய இந்திய சங்கத்தின் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இயன்றவரையில் தொழிற் தகராறுகளை தொழிற்சாலை மட்டத்திலேயே தீர்த்துக் கொண்டுவிட வேண்டும்; பல்வேறு தொழில்களிலும் சமரசக் குழுக்கள் அமைக்க அரசு உதவ வேண்டும்; அந்தக் குழுவிலிருந்து தொழிலாளரும் -- முதலாளிகளும் சமரசம் செய்து வைக்க ஒருவரையோ அல்லது ஒரு சமரச போர்டையோ நியமித்துக்கொள்ளலாம்.

அதிகபட்ச உடன்பாடு காணவும் -- இரு தரப்பினரிடையும் தகராறுகளைத் தீர்ப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயவும் வேண்டிய பணியை இந்த சமரச போர்டிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதைத் தவிர, இந்தியத் தொழிலாளர் மாநாட்டின் இரு தரப்பு -- முத்தரப்பு அமைப்புகள், 'அட்ஹாக' அமைப்புகளாக இல்லாமல், நிரந்தர அடிப்படையில் மாநில மட்டத்திலும்--அகில இந்திய மட்டத்திலும் செயல்படுவதாக இருக்கவேண்டும்.

இதையும் தாண்டி தீரா... சினைகள் இருப்பின, ...ருமைப் பூர்வமான அடிப்படையில் பஞ்சாயத்துத் தீர்வு முறையைக் கையாளலாம்.

இப்படிப் பல நடைமுறைகளை கையாண்டும் தகராறுகளுக்குத் தீர்வு ஏற்படாவிட்டால் சம்பந்தப்பட்ட தரப்பினரை நேரடி நடவடிக்கையிலிறங்க விட்டுவிட வேண்டும்.

ஊதியத்தை, உற்பத்தி -- விலைவாசியுடன் இணைக்கவேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... (...) ... ... வெளியிடப்படுகிறது.

ஒரே நேரத்தில் ஒலித்த இரட்டைக்குரல்

கேள்வி:— "ஊர்வ...த்திற்குத் தடை விதிக்கப்பட்டால் தடையை மீறி ஊர்வலம் நடக்குமா?"

பதில்:—" தடை விதிக்கப்பட்ட பிறகு ஆலோசிக்க வேண்டிய விஷயம்; நண்பர்களிடம் கலந்து பேசுவேன்."

புதுக் கட்சி ஸ்தாபகர் 7-11-72 அன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியது இது; அதே நேரத்தில், மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:—

கேள்வி:—" சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள்; ஊர்வலத்துக்குத் தடை விதிக்கப்பட்டால்......?"

பதில்:—" சனநாயகத்தில் சில கடமைகள் இருக்கின்றன; சனநாயகத்தில் உள்ள சில உரிமைகள் தடுக்கப்படும் போது அதை எதிர்த்தும் போராட வேண்டுமல்லவா?"

வன்முறைகளால் வளம் ஏற்படுமா?

இளைஞர்களுக்கு இந்திரா காந்தி அறிவுரை

ஷில்லா..., நவ. 8—

" மக்கள் உணர்ச்சி...யப்படாமல் நிதானத்தை... கைக்கொள்ள வேண்...; வன்முறைகளால் ...ம் வந்துவிடா...

" எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும், மொழி -- இனப் பிரச்சினை வரும்போது உணர்ச்சி வயப்பட்டுவிடுகிருர்கள்; குறிப்பாக, இளைஞர்கள் போராட்டத்தில் குதித்து விடுகிருர்கள்.

" இதுபோன்ற போராட்டங்களால் என்ன நன்மை கிடைத்துவிடப் போகிறது? நாட்டின் முன்னேற்றம்தான் தடைப்படும் -- அரசாங்கத்தின் சொத்துக்கள்தான் நாசமடையும்; எனவே, இது போன்ற வன்முறைகளில் இளைஞர்கள் ஈடுபடக்கூடாது"

என்று, தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அசாம் -- மணிப்பூர் -- மேகாலயா -- மிஜோராம் -- திரிபுரா -- அருணசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கட்குப் பொதுவான 'வடகிழக்குக் கவுன்சில்' என்ற அமைப்பின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள நூல் நிலையத்தின் மணி மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார்.

விண்வெளிக்கோள்

செயலற்றதாகச் செய்யும் முயற்சியில் வெற்றியாம்

பாரிஸ், நவ. 8—

பூமியைச் சுற்றிவரும் ஒரு விண்வெளி ஆய்வுக் கோளைச் செயலற்றதாக்கிவிடச் செய்யும் முயற்சியில் வெற்றிபெற்றதாக ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் கூறியிருக்கிறது.

சூரிய கிரகணத்தின்போது அந்தக்கோள் செயலற்றதாக்கப்பட்டது; அப்போது அது முழுப் பலத்தையும் சேதமடையாமல் வைத்திருந்து--கிரகணம் நீங்கியதும் இயங்கத் தொடங்கியது.

அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழா

சலவையாளர் முன்னேற்றச் சங்கச்சார்பில் பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழா 9—11—72 காலை 10-மணிக்கு புது வண்ணரப்பேட்டை சீனிவாச திருமண மண்டபத்தில் நடைபெறும்; தலைவர்: சி. ஆர். கோலப்பா எம்.எல்.சி.; பேசுவோர்: அமைச்சர்கள் என். வி. நடராசன், க. இராசாராம், மன்னை ப. நாராயணசாமி மற்றும் இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., காட்டூர் கோபால் எம்.எல்.சி., மு. மாசிலாமணி எம்.எல்.சி., மு வேதாசலம் எம்.எல்.ஏ, ஜார்ஜ் கோமகன் எம்.எல்.சி., வி. முனுசாமி, த. சேதுராசன், ஆ. ஆறுமுகம், பி. ஏ என். இராசரத்தினம், மற்றும் பலர்.

வேலூர் வட்ட தி.மு.க. கூட்டம்

வேலூர் (வ.ஆ.) வட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், 11—11—72 காலை 10 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் நடைபெறும்; மாவட்டச் செயலாளரும் -- நிர்வாகிகளும் கலந்துகொள்வர்; வட்டப் பிரதிநிதிகளும், சிறப்பு அழைப்பினரும் கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் இரா. சீனிவாசன் கேட்டுக் கொள்கிருர்.

சென்னை -- கிண்டி அயர் ஸ்மெல்ட்டிங் தொழிற்சாலை

கா. வேழவேந்தன் தலைவராகத் தேர்வு

சென்னை கிண்டி அயர் ஸ்மெல்ட்டிங் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையின் தொழிற் சங்கத்துக்கு 1972—73-ம் ஆண்டுக்குரிய தலைவராக சட்டமன்ற உறுப்பினர் திரு. கா. வேழவேந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணைத் தலைவராக அமீர் ஜான், செயலாளராக எம். சீனிவாசன், துணைச் செயலாளராக பி. எம். விசுவநாதன், பொருளாளராக என். இராதாகிருட்டினன் மற்றும் செயற்குழு உறுப்பினர் ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேற்கண்ட தொழிற்சங்கம், தி. மு. கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையுடன் இணைக்கப்பட்டது.